## காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில்
## 28.02.2023 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தின்
## தீர்மானம் நகல்கள்

**பொருள் எண். 1**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட புல எண்.220/2B விஸ்தீர்ணம் 0.02.50 (ஹெக்டர்) கால்நடைப்பட்டி நிலங்களை கம்பி வேலி அமைத்து பாதுகாப்பு செய்வதற்கு மதிப்பீடு தயார் செய்து அனுப்பி வைக்குமாறு திருச்செந்தூர் வட்டாச்சியர் அவர்களின் கடிதம் ந.க.ஆ1/116/2023 நாள்.02.02.2023-ந் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, ரூ.90,000/- (ரூபாய் தொண்ணூறு ஆயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்து தக்க நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 154/2023/இ1)**
**தீர்மானம் எண்.285**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண். 2**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8880/2022/P1 நாள். 13.02.2023-ந் தேதிய அனுமதி கடிதத்தில் நமக்கு நாமே திட்டம் 2022-2023 -ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சிக்கு பொதுமக்கள் பங்களிப்புடன் அரசு மானியத்தில் கீழ்காணும் விவரப்படி இரண்டு பணிகள் மேற்கொள்ளுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | | | | இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | அரசு மானியம் 67% | பொதுமக்கள் பங்களிப்பு 33% |
| 1 | காயல்பட்டினம் பைபாஸ் சாலையில் சூரிய விளக்குகள் (Solar Lights) அமைக்கும் பணிகள் | 10.00 | 6.70 | 3.30 |
| 2 | காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் சிறுமின் கோபுர விளக்குகள் 6 எண்ணம் அமைக்கும் பணிகள் | 25.50 | 17.09 | 8.42 |

மேற்காணும் இரண்டு பணிகளில் வரிசை எண்.1-ல் கண்டுள்ள பணிக்கு நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் அனுமதி கோரப்பட்டுள்ளது. வரிசை எண்.2-ல் கண்டுள்ள பணிக்கு மாற்றாக கீழ்காணும் பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | அரசு மானியம் 67% | பொதுமக்கள் பங்களிப்பு 33% |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலைய வளாகத்தில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி பணியாளர் ஓய்வு அறை அமைத்தல் பணி | 7.50 | 5.025 | 2.475 |
| 2. | நகராட்சிக்குட்பட்ட அலுவலக வளாகத்தில் பொதுமக்களுக்கு நிழற்குடை அமைத்தல் பணி | 7.50 | 5.025 | 2.475 |
| 3 | நகராட்சிக்குட்பட்ட சிவன் கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள நுண் உரக்குடிலை சுற்றி சுற்று சுவர் கட்டுதல் பணி | 22.00 | 14.74 | 7.26 |
| 4 | நகராட்சிக்குட்பட்ட சிவன் கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள நுண் உரக்குடில் வளாகத்தில் நிழற்குடை அமைத்தல் பணி. | 7.50 | 5.025 | 2.475 |
| | | 44.50 | 29.815 | 14.685 |

மேற்காணும் பணிகளுக்கு பொதுமக்கள் பங்களிப்பு ரூ14.685 இலட்சத்தினை இப்பணிகள் துவங்குவதற்கு முன்பு பெறப்படும் என்ற விபரத்தினை தெரிவித்து, உரிய வழிமுறையாக நிர்வாக அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுமதி கோரியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** -

1. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. சூரிய விளக்குகள் ரூ.10.00 மதிப்பீட்டில் அமைப்பதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. சிறுமின் கோபுர விளக்குகள் 6 எண்ணம் அமைக்கும் பணி மதிப்பீடு ரூ.25.50 இலட்சத்திற்கு மாற்றாக மேற்காணும் நான்கு பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண். 276/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.286</u>**

- நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
- சூரிய விளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- சிறுமின் கோபுர விளக்குகள் 6 எண்ணம் அமைக்கும் பணிக்கு மாற்றாக தேர்வு செய்யப்பட்டுள்ள 4எண்ணம் பணிகளை மேற்கொள்ள அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்.3**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டுள்ள சாலைகள் தற்சமயம் மிகவும் சேதமடைந்து உள்ளது. தார் மற்றும் சிமெண்ட் சாலைகளை புதுப்பிக்கும் பணிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் பரிந்துரையின் பேரில் 2022 - 2023 ஆம் ஆண்டு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (NSMT Scheme 2022 - 2023) கீழ் 6.00 கி.மீ நீளம் ரூ.190.00 இலட்சம் மதிப்பீட்டில் முழு மானியமாகவும் 4.07 கி.மீ நீளம் ரூ.134.00 இலட்சம் மதிப்பீடு நகராட்சி பொது நிதியிலும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அனுமதிக்கிணங்க முதற்கட்டமாக நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் (NSMT) 2022- 2023 திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு கீழ்கண்டவாறு திட்டமதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| **1** | Renewal BT surface by using CMP at Mohadum street road 139011R228,Uchimahaliammankoil street burial ground road 139001R003, Inootrinangaiamman koil street road 139001R005,Sethuraja south street road 139002S005,Kadayakudi 3rd street from east 139003R042,Kadayakudi 4th street from east 139003R043,Ekkiappa thaika street road 139004R070, Mohaideen matriculation school road 139005R099,Aruciya palli street road 139007R117,Aruciya palli street 1st cross street road 139007R118,Mela lakhsmipuram street road 139009R153,Lakhsmipuram Ammankoil 2nd street road 139009R190, Essakki ammankoil main street road 139010R208,Essakkiammankoil cross street road 139010R209,Visalatchiammankoil street road (Bus stand back side)East west main road 139010R216,Visalatchiammankoil street road (Bus stand back side)West main road 139010R217,Visalatchiammankoil street road (Bus stand back side) Middle street road 139010R218 in Kayalpattinam Municipality | **95.00** |
| **2** | Renewal BT surface by using CMP at LF Road South 3rd Street from east 139010R212,LF Road South 4th Street from east 139010R213,LF Road South 5th Street from east 139010R214,Mohadum alavudeen thottam road 139010R220,Tiruchendur road(KMT Opppssite) 139015R264,Quithemilleth nagar North 4th street road 139015R271,Quithemilleth nagar North 5th street road 139015R272,Quithemilleth nagar south 4th street road 139015R277,Quithemilleth nagar south 5th street road 139015R278,Quithemilleth nagar North 6th road 139015R285,Quithemilleth nagar North 7th street road 139015R286,Quithemilleth nagar south 6th road 139015R291,Quithemilleth nagar south 7th street road 139015R293,Quithemilleth nagar south 8th street road 139015R297,Poonthottam North street road 139017R306,Poonthottam Ammankoil street road 139017R310,Mattukulam to sulaiman nagar 1st cross street road 139018R334,Odakkarai burial ground road 139017R320,Muniyasamy koil east street 139001R001,Muniyasamy koil west street 139001R002,Arunachalapuram west street 139003R055,Kulam sahib thambi thottam main road from Aruciya palli street 139007R124,Kulam sahib thambi thottam east street road 139007R125,Kulam sahib thambi thottam west cross street road 139007R126 in Kayalpattinam Municipality | **95.00** |
| | **மொத்தம்** | **190.00** |

மேற்காணும் விவரப்படி திட்ட பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு -

1. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி விவரம் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. சாலை பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட (ரூ.95.00 இலட்சம் +95.00 இலட்சம்) மதிப்பீடுகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.287**</u>

- **நகராட்சி நிர்வாக இயக்குநர் அனுமதி விபரம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**
- **நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2022-2023ம் ஆண்டிற்கு ரூ. 190.00 இலட்சம் மதிப்பீட்டில் 41 எண்ணம் சாலைகள் மேம்பாடு செய்வதற்கு இரண்டு சிப்பங்களாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்படுகிறது.**

<u>**பொருள் எண்.4**</u>

காயல்பட்டினம் நகராட்சியில் குடிநீர் விநியோகப்பயன்பாட்டில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை தேவையான பணியாளர்கள் மற்றும் அதற்கான சுத்தம் செய்யும் பொருட்களை பயன்படுத்தி சுத்தம் செய்தல், நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிநீர் பம்பிங் குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யப் பதிக்கப்பட்டுள்ள அனைத்து வகை குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை அதற்கான பணியாளர்கள் மற்றும் அதற்கு தேவையான பொருட்களை பயன்படுத்தி சீரமைத்தல், நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரிசெய்யும் பொழுது சிமெண்ட் சாலைகள் மற்றும் தார்சாலைகளில் ஏற்படும் பழுதுகளை அதற்கான பணியாளர்கள் மற்றும் தேவையான பொருட்களை பயன்படுத்தி சீரமைத்தல், தலைமை நீரேற்றம் நிலையத்தில் உள்ள குடிநீர் பம்பிங் செய்யும் பணிகளை செய்திட மின்பணியாளர் (நிலை 2) ஒரு நபர் மற்றும் உதவியாளர் (மஸ்த்தூர் பணியாளர் நிலை 2) நான்கு நபர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணி செய்தல், நகராட்சிப்பகுதிகளில் குடிநீர் விநியோகப் பணிகளை செய்திட உதவியாளர் (மஸ்த்தூர் பணியாளர் நிலை2) ஐந்து நபர்கள் மற்றும் அவசர பணிகளுக்காக வாகன ஓட்டுநர் (ஹெவி) ஒரு நபரை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணி செய்தல் மற்றும் காயல்பட்டினம் நகராட்சியில் குடிநீர் கட்டணம் செலுத்தாத நபர்களின் குடிநீர் இணைப்புகளை துண்டிப்பு செய்தல் போன்ற பணிகளை ஒப்பந்த பணிகள் மூலம் செய்திடவும், அதற்கான செலவினங்களை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் இந்நகர்மன்ற தீர்மான எண். 2017 நாள் 29.05.2020 ன்படி மன்ற

அனுமதி பெறப்பட்டு அதன்படி ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் பணி செய்திட திரு. டி. மாதவன், ஒப்பந்ததாரர், ஓடக்கரை, காயல்பட்டினம் என்பவருக்கு 06.05.2020 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு அதன்படி குடிநீர் விநியோகப் பணிகள் மற்றும் பம்பிங் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்ததாரரின் ஒப்பந்தக் காலத்தினை ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நகர்மன்ற அனுமதி பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டு மேற்காணும் குடிநீர் பம்பிங் செய்யும் பணிகள், குடிநீர் விநியோகம் செய்யும் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்பொழுது , டிசம்பர் 2022, ஜனவரி 2023 மற்றும் பிப்ரவரி 2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகள் செய்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.230, நாள்.29.11.2022ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே குடிநீர் பம்பிங் செய்யும் பணிகளையும் நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளையும் மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகளையும் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டுவரும் திரு.டி.மாதவன், ஒப்பந்ததாரர், ஓடக்கரை, காயல்பட்டினம் என்பவர் மூலம் ஏற்கனவே நகர்மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் பணிகளை தொடர்ந்து மார்ச் 2023, ஏப்ரல் 2023 மற்றும் மே 2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு நீட்டித்து தொடர்ந்து மேற்கொள்ள, வேலை உத்திரவு வழங்கிட அனுமதிக்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வருவாய் நிதியில் வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண்: 403/2020/இ1)

**<u>தீர்மானம் எண்.288</u>**

குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு பணிகள் செய்வதற்கும், அதற்கான செலவினம் இந்நகராட்சி குடிநீர் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண். 5</u>**

காயல்பட்டணம் நகராட்சிப்பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை மேற்கொள்ள போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால், பொது சுகாதாரத்தில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.24608/2022/இஏ2, நாள்.11.11.2022ன் படி, வெளிக்கொணர்வு அடிப்படையில் பணியாளர்கள் கொண்டு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி, இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1329/2021/எச்.1, நாள். 28.12.2022ன் படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி அனுமதி கிடைக்கபெறும் காலம் வரையில், திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை நல்ல

முறையில் செயல்படுத்திடவும், பொதுசுகாதாரம்-திடக்கழிவு மேலாண்மைப்பணிகளின் முக்கியத்துவம் கருதியும், தற்பொழுதுவரை பணி செய்து வரும் M/s. கே.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், தென்திருப்பேரை என்ற நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் மார்ச் 2023 வரை பணி செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்.289</u>**

பொதுச்சுகாதார அவசியத்தை கருத்தில் கொண்டு அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தில் மார்ச் 2023 ஆம் மாதத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண். 6</u>**

மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் அலுவலக, **30.12.2022** மற்றும் **11.01.2023**ம் நாட்களில் பெறப்பட்ட மின்னஞ்சல் செய்திகளின்படி, தமிழ்நாடு அரசு **புதுமைப்பெண் திட்டம்** மற்றும் **தைத் திங்கள் நிகழ்வுகள்** போன்ற நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்களை, **10X 12** அளவில் **2** விளம்பர பதாகைகள் தயார் செய்து, காயல்பட்டணம் நகராட்சி பேருந்து நிலையத்தில் வைக்கப்பட்டதற்கு, இரண்டுக்கும் சேர்த்து செலவு தொகை ரூ.**3500/–**னை இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வர் திரு.எஸ்.நிஜந்தன், என்பவரால் செலவிடப்பட்டதாக அறிக்கை பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவு தொகையினை வருவாய் பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. – அனுமதிக்கலாம்.
ந.க.எண். **1569/2019/**எப்.**1**

**<u>தீர்மானம் எண்.290</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண். 7</u>**

காயல்பட்டணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கடற்கரை பகுதியில் நகராட்சியினால் கட்டப்பட்டுள்ள கழிப்பறைகள் நல்ல முறையில் புணரமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. இதனை பராமரித்திட பல முறை ஏல நடவடிக்கை விடப்பட்டும், எவரும் ஏலம் எடுக்க முன் வராத நிலையில் ,சமூக விரோதிகள் சிலர் மேற்படி கழிப்பறையினை சேதப்படுத்தி பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலைக்கு உருவாக்கி விட்டனர். இந்த நிலையில் திரு.அலிமாமா என்பவர் தவறான கருத்துக்கள் குறித்தும், நகராட்சி அலுவலர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களை குறித்தும் அவதூறாக வாட்ஸ்ஆப் வலைதளத்தில் பேசி, பொது மக்களிடம் நகராட்சி குறித்த கெட்ட பெயர் ஏற்படுத்தும் வகையில், பரப்பி வருகின்றதை, ஆறுமுகநேரி காவல் நிலையத்தில் புகார் செய்திட, திருச்செந்தூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அனுமதி பெற்றிட, இந்நகராட்சியின் அரசுவழக்கறிஞர் திருமதி.எஸ்.விஜி என்பவரைக் கொண்டு, ஆவணங்கள் தயார் செய்தது

மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய வகைக்கும் சேர்த்து கட்டணமாக தொகை ரூ.15000/—னை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியினை பெற்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

அ.கு.

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.291</u>**

- அனுமதிக்கப்படுகிறது
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண். 8</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் இருந்து வருகின்ற வாகனங்களில் நிரந்தரமாக ஒலிபெருக்கிகளை பொருத்திட, நகராட்சியின் அனைத்து வகையான (வரி வசூல் மற்றும் பிற) அறிவிப்புகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளத்தக்கவகையில், (தற்போது வரி வசூல் பணியின் அவசர அவசியம் கருதி) 3 ஒலிபெருக்கிகளை மட்டும் வாங்கிடவும், அதற்கான செலவினங்களை வருவாய் பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. அனுமதிக்கலாம்.

ந.க.எண்.100/2023/எச்.1

**<u>தீர்மானம் எண்.292</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண். 9</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் இருந்து வருகின்ற வாகனம் எண். TN 69 AY 0603 ல் உள்ள பழுதுகளை சரிசெய்து தகுதி சான்று பெறுவதற்கு நகராட்சி ஓட்டுநர் அளித்துள்ள அறிக்கையினை சுகாதார ஆய்வாளர் பரிந்துரை செய்துள்ளார். எனவே நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின்படி, மேற்படி பழுதுகளை சரிசெய்ததற்கும், தகுதி சான்று பெற்றதற்கும், பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி சரிசெய்திட வேலை உத்தரவு வழங்கியததை அங்கீகரித்திடவும், செலவின தொகை ரூ.114696/—னை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

உத்தரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம், செலவினத்தினை அனுமதிக்கலாம்.

ந.க.எண்.135/2023/எச்1.

**<u>தீர்மானம் எண்.293</u>**

- அனுமதிக்கப்படுகிறது
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**பொருள் எண். 10**

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் உள்ள **18** வார்டுகளிலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத பகுதியாக (ODF ++) மத்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் தெரிவித்த நிபந்தனைகளின்படி அறிவிப்பதற்கு, இப்பொருள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகைளில் இரண்டு தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்திடவும், அதற்கான செலவினங்ளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 21/2023/எச்.1
**தீர்மானம் எண்.294**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண். 11**

காயல்பட்டணம் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்ற திரு.சே.நிஜந்தன், என்பவர் நகராட்சி தொடர்பான பணிகள் காரணமாக, மாவட்ட ஆட்சியர் அலுவலத்திற்கு, திங்கள் கிழமை குறைகளையும் மனுக்கள் தொடர்பான கூட்டத்திற்கு கடந்த **07.11.2022** முதல் **30.01.2023** வரையிலான காலங்களில், ஒவ்வொரு திங்கள் கிழமையிலும், மற்றும் **16.11.2022** அன்று சென்னை உயர்நீதின்றம் மதுரை கிளை, மதுரைக்கும் வழக்கு சம்பந்தமாக சென்று வந்த வகைக்கு பயணப்படியாக தொகை ரூ.**3620**/–னை தனியர் வழங்கிய பட்டியல்படி, வருவாய் நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்
ந.க.எண்.1569/2019/எப்.1
**தீர்மானம் எண்.295**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண். 12**

காயல்பட்டணம் நகராட்சி சார்பாக, வரவு செலவு வைக்கப்பட்டுள்ள ஐசிஐசிஐ வங்கி, காயல்பட்டணம் கிளையின் சமூக பொறுப்பு நிதியில் (CSR Fund) இருந்து, இந்நகராட்சியால் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இரண்டு எண்ணங்கள் பேட்டரியால் இயங்குகின்ற வாகனங்கள் (E- Vehicle) வழங்கப்பட்டுள்ளன. மேற்படி வாகனங்கள் நகராட்சியில் பெறப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், மேற்படி இரண்டு வானகங்களையும் பொது சுகாதார பிரிவின் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்திக் கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – பொது மக்களின் சுகாதார நலன் கருதி பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.821/2022/எச்.1

**<u>தீர்மானம் எண்.296</u>**

- இந்நகராட்சி பொது சுகாதார பயன்பாட்டிற்கு சமூக பொறுப்பு நிதியில் (CSR Fund) இரண்டு பேட்டரி வாகனங்கள் வழங்கிய ஐசிஐசிஐ வங்கிக்கு நன்றி தெரிவித்து தீர்மானிக்கப்படுகிறது.
- இரண்டு பேட்டரி வாகனங்களை (BOV) வரும் காலங்களில் நகராட்சி மூலம் பராமரிப்பு செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் எண். 13</u>**

காயல்பட்டினம் நகராட்சியில் திரு. பால சரவணன், ஆறுமுகநேரி என்பவர் பொறியாளராக பதிவு செய்திட இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி நபருக்கு பதிவு பெற்ற பொறியாளராக சான்று வழங்குவதற்கு தனியரால் இணையதளம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை நேராய்வு செய்ய வேண்டியுள்ளது. அதன் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.297</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண். 14</u>**

இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பொன்னன் குறிச்சியில் உயரழுத்த மின் இணைப்பு பெறப்பட்டு, தடையில்லா மின்சார அமைப்பாக 250 கே.வி.ஏ டிரான்ஸ்பார்மர் பொருத்தப்பட்டு இயக்கத்தில் இருந்து வருகிறது. இவ்வமைப்பானது நீண்ட காலமாக இயக்கத்தில் தொடர்ந்து இருந்து வருவதால் அதனை சர்வீஸ் செய்து இயக்க வேண்டியுள்ளது. மேலும், ஆயில் லீக்கேஜ் மற்றும் சிலிகா ஜெல், ப்ரித்தர்கள், இன்சர்வேட்டர்கள், LT, HT புஸ்லிங்ஸ் ஓமிக் வேல்யூ மற்றும் எர்த் ரெசிஸ்டன்ஸ் ஆகியவை மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது. மேலும், டிரான்ஸ்பார்மர் யார்டு பராமரிப்பின்றி உள்ளாதால் அதனை பெயிண்டிங் செய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட பராமரிப்பு பணிகள் செய்யாததால் அடிக்கடி மின்தடை இழப்பு ஏற்படுகிறது (Transmission Loss). எனவே, மேற்கண்ட பழுதுகளை நீக்கி இயக்கித்தருவதற்கு ரூ.2,60,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீடு ரூ.2,60,000/-ஐ மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.298</u>**

- மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது.

- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் எண். 15</u>**

காயல்பட்டினம் நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் (NEW BUS STAND SHOPS) 13 கடைகளில் 4 கடைகள் தற்போது குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. ஆகையால் மீதமுள்ள 9 கடைகளும், புதிய பேருந்து நிலைய வெளிக்கடைகள் (SHOPPING COMPLEX) – 8 ல் -7 கடைகளும் ஆக மொத்தம் 16 கடைகளுக்கு ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக குத்தகை வாடகை மறு மதிப்பீடு செய்யாமல் இருந்து வருகிறது. இதனால் இந்நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இவற்றை தடுக்கும் வகையில் இந்நகராட்சி நிர்வாக நலனை கருதியும், நகராட்சி நிதி நிலைமையை உயர்த்தும் வகையில் அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.03.07.2007-யின்படி, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு அரசாணையில் தெரிவிக்கப்பட்ட உத்தரவுகளை பின்பற்றியும், இந்நகராட்சி நிர்வாக நலன் கருதியும், நகராட்சி நிதி நிலைமையை உயர்த்தும் வகையில் இந்நகராட்சி பேருந்து நிலைய கடைகளான உள்புறம் மற்றும் வெளிபுறம் கடைகளுக்கு 01.04.2023 முதல் அங்காடி மதிப்பீன் அடிப்படையிலான திருத்தியமைக்கப்பட்ட குத்தகை விலை நிர்ணயம் செய்வதற்கும், பொது ஏல நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

இந்நகராட்சி பேருந்து நிலைய கடைகளுக்கு 01.04.2023 முதல் அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட குத்தகை விலை நிர்ணயம் செய்து பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.299</u>**

ஏல குத்தகை நடைமுறை விதிகளின்படி, ஒன்பது ஆண்டுகளுக்கு மேல் அனுபவத்தில் இருந்து வரும் கடைகளுக்கு பொது ஏலம்/ஒப்பந்தபுள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் ,இதர கடைகளுக்கு தற்போதைய சந்தை மதிப்பீட்டின்படி, வாடகை நிர்ணயம் செய்யவும் மன்றம் அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண். 16</u>**

காயல்பட்டினம் நகராட்சி - பொதுசுகாதார நலன் - டெங்கு மற்றும் தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு இந்நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளிலும் கொசுப் புழுக்கள் கண்டறிந்து அழிக்கும் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தற்காலிக மஸ்தூர்களை கொண்டு இந்நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகளில் கொசுப்புழுக்களை கண்டறிந்து அழித்தல் மருந்து தெளித்தல் மற்றும் பொதுமக்களுக்கு டெங்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்ற பணிகளை நாள் ஒன்றிற்கு ரூ. 320/- வீதம் மஸ்தூர் பணியாளர்களை வைத்து பணிகள் செய்வதற்கு மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் அதன் அடிப்படையில் இந்நகர் மன்ற தீர்மான எண்.1713 நாள். 30.11.2018 ன் படி கொசுப்புழுக்கள் கண்டறிந்து அழிக்கும் பணிக்கு 40 மஸ்தூர் (DBC) பணியாளர்களுக்கு தூத்துககுடி மாவட்ட ஆட்சியர், அவர்களின் உத்தரவில் கண்டுள்ள தினக்கூலி விலை விகிதத்தில் ஊதியம் வழங்க தொடர்ந்து மன்றம் அனுமதி பெற்று கொசுப்புழு பணியாளர்களை ஒப்பந்ததாரர் கே.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன் மூலம் பணிகள்

செய்யப்படுகிறது. மேற்காணும் நிறுவனத்தின் அனுமதி காலம் 31.03.2023 முடிவடையும் நிலையில் இந் நகராட்சியில் டெங்கு மற்றும் தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு தற்சமயம் நகராட்சி பகுதிகளில் 14,542 வீடுகள் உள்ளன. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2751/2017/J1 நாள். 23.01.2018-ல் தெரிவித்துள்ளவாறு, 300 வீடுகளுக்கு ஒரு நபர் வீதம் 14,542 வீடுகளுக்கு 48 நபர்கள் தேவையாக உள்ளது. இந்த 48 நபர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவில் கண்டுள்ள தினக்கூலி விலை விகிதத்தில் ஊதியம் வழங்குவதற்கும், இந்த 48 கொசு ஒழிப்பு பணியாளர்களை (DBC) பணியாளர்களை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செயல்படுத்துவதற்கு இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் 15.02.2023-ந் தேதி குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. இந்நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகளில் கொசுப்புழுக்களை கண்டறிந்து அழித்தல் மருந்து தெளித்தல் மற்றும் பொதுமக்களுக்கு டெங்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்ற பணிகளை 48 பணியாளர்களை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.K3/16617/2022 நாள். 20.09.2022-ன்படியான உத்திரவில் கண்டுள்ள மஸ்தூர் (Mazdoor) தினக்கூலி விலைவிகிதம் வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.300</u>**

- பொதுச்சுகாதார நலன் கருதி தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் 48 நபர்களை கொண்டு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- 2022 - 2023 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட மஸ்தூர் தினக்கூலி விலை விகிதத்தில் ஊதியம் வழங்க அனுமதிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்.17**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் உள்ளே உள்ள பயணிகள் நிழற்கூடைக்கு பின்புறம் உள்ள காலியிடம் மற்றும் அம்மா உணவகத்திற்கு வட பகுதியில் காலியிடம் ஆகியவை இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.706/2015/அ2 நாள். 31.12.2019-ன் படி, தரை வாடகைக்கு அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

1. திரு. சத்யராஜ், 38, பூந்தோட்டம், காயல்பட்டினம்
2. திரு. எஸ். புகாரி, 60E, விசாலாட்சி அம்மன் கோவில் தெரு, காயல்பட்டினம்

மேற்கண்ட இரண்டு காலியிட தரை வாடகைகளுக்கு மூன்றாண்டு அனுமதி காலம் 31.12.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இந்நகராட்சி நிர்வாக நலனை கருதியும், நகராட்சி நிதி நிலைமையை கருத்தில் கொண்டு மேற்கண்ட இரண்டு காலியிட தரை வாடகை ஜனவரி 2023, பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் நீட்டிப்பு செய்து ஆணை வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.301**

காலியிட தரைவாடகை மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்து அனுமதி வழங்க தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண். 18**

காயல்பட்டினம் நகராட்சியின் அவசர அவசியத்தின் கீழ் பணிகளை நகராட்சி சட்டம் 1920 பிரிவு15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டு தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு;
மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.302**

பிரிவு 15 பதிவேடு பார்வையிட்டு செலவினங்கள் அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண். 19**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2022 முதல் ஜனவரி - 2023** ஆம் மாதம் வரையிலான கேட்பு வசூல் நிலுவை பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ | வரியினங்கள் | நிலுவை மற்றும் நடப்பு கேட்பு(இலட்சத்தில்) | நிலுவை மற்றும் நடப்பு வசூல்(இலட்சத்தில்) | நிலுவை மற்றும் நடப்பு நிலுவை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 202.56 | 154.78 | 47.78 |
| 2 | காலிமனை வரி | 31.49 | 15.09 | 16.40 |
| 3 | குடிநீர் கட்டணம் | 110.19 | 65.67 | 44.52 |
| 4 | வரியற்ற இனம் | 13.92 | 12.58 | 1.35 |
| 5 | தொழில்வரி | 22.25 | 22.25 | 0.00 |
| 6 | SUC Charges | 27.04 | 16.46 | 10.58 |

**அலுவலக குறிப்பு:**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**தீர்மானம் எண்.303**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**பொருள். எண்.20**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2022 முதல் ஜனவரி - 2023 ஆம்** மாதம் வரையிலான வரவு மற்றும் செலவு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வரவினங்கள்** | | | |
|---|---|---|---|
| 110 | வரியினங்கள் | **I-1** | 15781239 |
| 130 | நகராட்சியின் வாடகை வரவினங்கள் | **I-3** | 1187708 |
| 140 | பயனர் கட்டணங்கள் | **I-4** | 6489927 |
| 150 | விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | **I-5** | 800090 |
| 160 | வருவாய் மானியங்கள், பங்களிப்பு மற்றும் மானியங்கள் | **I-6** | 66984781 |
| 170 | முதலீடுகள் மூலம் வருமானம் | **I-7** | 5900 |
| 171 | வங்கி வட்டி | **I-8** | 143430 |
| 180 | இதர வருமானம் | **I-9** | 532594 |
| **மொத்தம்** | | | **91925669** |
| **செலவினங்கள்** | | | |
| 210 | ஊதிய செலவினங்கள் | **I-10** | 35752292 |
| 220 | நிர்வாக செலவினங்கள் | **I-11** | 4150798 |
| 230 | இயக்க-பழுதுகள்(ம)பராமரிப்பு செலவுகள் | **I-12** | 23021897 |
| 240 | நிதிச்செலவுகள் | **I-13** | 717352 |
| 250 | திட்டசெலவுகள் | **I-14** | 418545 |
| 260 | மானியங்கள் (ம) பங்களிப்புகள் | **I-15** | 20000 |
| **மொத்தம்** | | | **64080884** |
| **மொத்தம் கூடுதல் / குறைவு** | | | **27844785** |

**அலுவலக குறிப்பு:**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**தீர்மானம் எண்.304**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**ஓம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
**காயல்பட்டினம் நகராட்சி**